70

[illegible]


C

C

ACL-TMAL
00086.


3


(R23:41)
N13
180051

918

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
30 JUN 1913
MADRAS



சிவமயம்.

# திருநாகேச்சரப் பதிற்றுப்பத்தந்தாதி.

திருநாகேச்சரம்

சி. வா. சாமிநாத முதலியாரால்

இயற்றியது.

ஆரியன் அச்சாபீஸ்

கும்பகோணம்.

1913.

(923:41)
ML3.
180051

உ

சிவமயம்.

# செண்பகாரண்ய க்ஷேத்திரமென்னும் திருநாகேச்சரப்

# பதிற்றுப்பத்தந்தாதி.

இஃது

மேற்படி திருநாகேச்சர வாசியும்,

திருக்கயிலாய பரம்பரை செங்குந்த மரபினருமாகிய

புராணிகர்,

**மகா-௱-௱-ஸ்ரீ மெய்கண்ட முதலியாரவர்கள்**

விருப்பத்தின்படி,

செந்தமிழ்நாவலர்

**ஸ்ரீமான், புதுவை, த. செய்யப்ப முதலியாரவர்கள்**

மாணக்கருளொருவராகிய

ஷை திருநாகேச்சரம்.

**மகா-௱-௱-ஸ்ரீ சி. வா. சாமிநாத முதலியாராலியற்றித்**

திருநெல்வேலி சுவாமிகளென்று வழங்கும்

வல்லநாடு.

**ஸ்ரீலஸ்ரீ அறிவாநந்த சுவாமிகள் முன்னிலையிற்**

பரிசோதித்து,

கும்பகோணம்

ஆரியன் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1913 [அணா 1.

ஆவணக்காப்பக
சென்னை-600 008.
180051

கணபதிதுணை.

# முகவுரை.

ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதாநந்த சின்மய சிதாகாச சித்சொரூபனாகிய சிவபெருமான் ஆன்மகோடிகளுய்யும் பொருட்டு, ஸகளீகரித்தபடிவத்தான் ஆங்காங்கெழுந்தருளிய திவ்யதிருப்பதிகள் பலவற்றுள்ளும் சிறப்புடையதும், புண்ணியநதியின் பாற்படு தக்ஷிணகங்கையென்னும் காவிரியாற்றின் தென்கரையிலுள்ளதும், சைவசமயாசாரியர்களாகிய மூவர் திருப்பாடல்களேற்றதும், செண்பகாரண்ய க்ஷேத்திரமென்னும் மியற்பெயரினையுடையதுமாகிய இத்திருநாகேச்சர ஸ்தலத்திற்கு முன்னோர்களால் "நாகநாதவெண்பா" "குன்றுமுலையந்தாதி" "கொம்பனைமாலை" முதலிய அரியசெந்தமிழ்ப் பிரபந்தங்கள் பலவியற்றப்பெற்றிருந்துங் காலகதியாலவைகளொழிந்தமையின் அக்குறையினை நிவர்த்திக்கும் பொருட்டு இந்நகர வாசிகளிற் சில சைவாபிமானிகள் கல்விகேள்வியிற் பெரிதுங் குறைபாடுடைய வென்னைப் பன்முறையுந் தூண்டினமைகொண்டு " திருநாகேச்சரப்பதிற்றுப்

பத்தந்தாதி" என்னுமிச்சிறிய பிரபந்தத்தினை யடியேன் சிற்றறிவிற் கெட்டிய வாறு புனைதலாயினன். இதின் மலிந்து கிடக்கும் சொற்குற்றம் பொருட்குற்றங்களை நோக்கின் மணற்சோற்றிற் கல்லாராய்தலொக்குமாதலின் அதனைக்கருதாது எல்லாம் வல்ல நம்பெருமானது திவ்ய சரணாரவிந்தங்களுக் குரித்தானமைகொண்டு பேரறிவாளர்களிதனை யெள்ளா தங்கீகரிப்பார்களாக. அடியேன் எடுத்துக்கொண்ட இக்கயிங்கிரியம் இடையறாது முடிதற்பொருட்டுப் பெரிதும் முயற்சித்த எனதாப்தர் மகா-ள-ள-ஸ்ரீ சு. சாமிநாத முதலியாரவர்கட்கு மிக்க நன்றி பாராட்டக்கடவேனாகவும்.

இங்ஙனம்.
கற்றோர்க்கடிமைக்கடிமை.

**சி. வா. சாமிநாதன்.**

உ

கணபதிதுணை.

# செண்பகாரண்ய க்ஷேத்திரமென்னும் திருநாகேச்சரப்

# பதிற்றுப்பத்தந்தாதி.

## காப்பு.

நீருந் தலையுஞ் சடைக்கணிந்த நிமலன்றிருநா கேசனடிக்
காருந் தமிழ்ச்சொற் பதிற்றுப்பத் தந்தாதிக்காந் துணைதருமென்
சோரு மனத்துள் ளுறைமதியந் தூண்டுசுடராய்க் கருணைமதங்
கூரும் படிவெம் மழுப்பொறுத்த குணக்குஞ்சரத்தின் றிருத்தாளே.

## நூல்.

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மணியார்கயிலைக்கண்ணுதலார் மன்னுந்திருநாகையினணுகித்
துணியாமடங்கொன்றறிவருளுந் துணைத்தாண்மலரென்மலரகத்
கணியாயணிவித்தொருநாகையாதிமுதற்சோதியெனப் [துக்
பணியாநிற்கத்தம்பதமே பணித்தாதரித்ததெவ்வாறே. (1)

எவ்வாறெயின் மூன்றன்றழலா யெரித்தபெருமானொருமூவர்க்
கிவ்வானுலகம்புகழ்ந்தேத்துமியல்பினருளக்குன்றமுலைச்
செவ்வாயிளமென்கொடிதழுவத்திகழும்விடைநாகேச்சரவ
னவ்வாறெழுந்ததிருக்கோலமடிநாயேற்குமருள்வானே. (2)

வானேநிலனேமுதலைவர்வதிந்தவுடலச்சுமைபொறுத்தே
ஞானேனிலனுனடிக்கன்புமடியாரிடத்தும்நாகைநகர்க்
கோனேநயனக்கணைமடவார் குழைப்பக்குழைந்தபுல்லறிவிற்
றானேயுனதின்னருணிறுவித்தக்கானெனக்கொள்மிக்காயே (3)

காயாப்பிறவிப்பெருந்தரங்கக்கடலிற்றளையிற்கட்டுழலுந்
தீயேற்கமரர்மெய்த்தவத்தோர்தேடித்துதிக்கும்பங்கயம்நா
வாயாயுதவிக்கதிதருபெம்மானேகதிக்குஞ்செம்மனத்தாற்
றாயேயனையாய்நாகைவளர்சர்ப்பாபரணக்கற்பகமே. (4)

பகரினினதுபெருஞ்சீர்த்திப் பரப்புக்கெனது சிற்றறிவோ
நிகருமிசைக்கப்பசியதுழாய்நெடியோன்வேதனறியகிலா
முகடுமுளரித்திருப்பதத்தின்முடிவுமென்றாலிம்ய்வரைச்
சுகமேவியநாகேசபரஞ்சோதீதுரியச்சுடரொளியே. (5)

சுடர்க்கண்ணொருமூன்றுடையானேசுளிக்குந்தறுகட்பெருநா
ற்கோட், டடற்கண்ணையிராவணப் பெருவாழ்வமைய்ப்பெரினு நல்
குரவே, படர்க்கண்டெனினுநினைமறவாப்பதமேதருதியையவராப்,
படக்கண்ணமர்தெய்வநாகைப்பரனேயுமையாளிடத்தரனே. (6)

அரனேயுனைக்கண்டவ்வளவிலன்புமுருகவகங்குழைய
* நிரையாநந்தவெள்ளமுளம்நிறம்பித்ததும்பிப்புறம்பொழுகக்
குரவோனெனவந்தருளளிக்குங்குன்றேகனகக்குன்றமுலைக்
குருகாரமுதே நினையல்லாலறியேன்பிரிதொன்றுன்னிடவே. (7)

உன்னற்கரியவொருபொருளையும்பர்க்கமுதந்தருங்கடலைக்
கன்னற்கனியென்றென்னிதயக்கருத்துளினிக்குங்கருங்களனை
நன்னக்கனைச்சண்பகமருவுநாகேச்சரனைக்கண்டனைவீர்
முன்னைப்பிறப்பின்றொடக்கறுத்துமுற்றத்துறக்கந்தருவானே. (8)

வானேரிளமென்மதிக்கொன்றைச்சடையாயினியவான்சுரபிப்
பானேரியல்வெண்ணீறணிந்துன்பதம்போற்றாதேபுன்குரம்பை
யூனேசுமந்திங்கிருந்தேனுக்குவப்பக்களிக்குஞானநறுந்
தேனேயருளாய்நாகையருந்தேவேயரவத்தேவிறையே. (9)

---

* நிரை—ஒழுங்கு.

* இறைவாள்வளைபூந்தளிர்தடக்கையிமயச்சிறுமானொடுங்குழவிப்
பிறைவாணுதற்சிற்றிடையனையும்பிணங்கத்தணிக்குந்தனிப்பிழம்
நறையார்மலர்ச்சண்பகத்தேறனனைப்பக்கமழுநாகலிங்க [பே
குறையேதவிர்த்தென்னிடைமருவுங்குழகாவமரர்தொழுமழகா.

மேற்படி வேறு.

தொழுமடியவர்களிருண்மலந்துடைக்குந்தூயனேதுவக்காதி
வழுவுடலுயிரிந்திரியமென்செயலுமற்றுநீயவையென்ருற் [க்
பழுதினின்னருளென்பதித்திலையெனக்கேபழமறைதொழுதேத்த
கெழுமணியரவந்தருநிழலமர்நாகேச்சரப்பெருவாழ்வே. (11)

பெருகுகாமவெந்தீயொடு புன்னெறிபிறழ்மனமறநாட்டத்
துருகுநல்குரவடற்பிணியிவைகடிந்துன்னருட்டிருவேட்டற்
கருகனன்றெனினுங்கடைக்கணித்தாளலைகடலெழுநஞ்சாற்
கருகுகந்தரச்சுந்தரநாகைவாழ்கங்கையஞ்சடையானே. (12)

சடைமறைத்திடுமொண்மதிச்செல்வனைச்சண்பகத்தருநீழல்
விடைநிறுத்தியநாகலிங்கேசனைவேண்டுநர்க்கருணீரான்
மடையிறுத்துமுக்கண்ணனைப்பானிறவண்ணனைமடவன்னம்
நடைநிறுத்துகிரிக்குயைநாதனைநாடுவன்றமியேனே. (13)

தமியனேத்துதனுளுநின்பொன்னடித்தாமரைமனம்வாக்கா
லமையவாழ்த்துதலுன்றிருநாமமதன்றியுமுளதேயோ
தமரநூபுரச்சீரடிவல்லியாடழுவுதிண்புயநாகை
யமுதவாரிதியேபரஞ்சோதியேயடியவர்க்கெளியானே (14)

ஆனமாமறைகூறிடுநின்புகழாங்கவையறியாதே
மானலெய்திமயங்கிடிலறிவிலாமாந்தருமுணர்வாரோ
ஞானமேனிநலத்தரைநாடிடும் நாகையெம் பெருமானே
பானல் வாள்விழிமங்கையொர் பங்கநீ பகருவதறி யேனே (15)

---

* இறை—மேன்மை.

அறிவதொன்றிலை நின்னருட் பேறலாதாறலைத்திடுபுல்லோர்
நெறியினுங்கொடுமறம்புரிநிலையுளேனெடுந்திரட்கருங்கூற்றங்
குருகுநாளரும் பாலகன்வேண்டலிற்குமைத்தனையிருந்தாளா
னறியமென்குழன்மாமுலைகாதலநாகையம்பதியானே. (16)

பதியடிச்சுவடெந்தலைவைகுமோபழமறையினுங்காணு
வதிதநாயகவள்ளலென்சித்தமோவடற்சிலைமனந்தேற்றிக்
கதியடைந்திடவெண்ணியகாணுமோகாலும்வெண்டிரைத்தெய்வ
நதியணிந்திடுமொண்சடைநாகைவாழ்நாதனென்றொருதேவே (17)

ஒருவனாயுலகெவ்வுயிராகியுமொப்பிலெப்பொருடோறு
மருவுபேதமபேதமுமாகிய மாசறுமனத்தோனை
யுரககங்கணநாகலிங்கேசனையும்பர்தம்பெருமானைக்
கருதவல்லுநர்தாமவராகுவர்கருவிடையுழலாரோ (18)

உழலுவேனிருவினைவயினாவதுமோர்கிலனயர்வில்லாப்
பழவடித்திருத்தொண்டுசெய்துன்னடிப்பத்தியின்மலிகாதற்[றைத்
றழையவேண்டுவதென்றருள்வாய்கொலோதண்மதிமிளிர்கொன்
தழைவிழைந்தணிவேணியநாகைவாழ்தண்ணளியியலானே (19)

இயலுணர்ந்தபாவலர்புனையலங்கலினின்புறுபுலவோனைக்
கயனெடுங்கணொருத்திமணாளனைக்கன்மனக்கொடியேனுக்
கயலுமண்மையுமாகியசித்தனையத்தனையணிநாகைப்
புயலகற்றியசண்பகநீழலிற்போற்றிலர்திருந்தாரே. (20)

## எழுசீர்க்கழி னெடிலடி யாசிரிய விருத்தம்.

திருந்தலர்புரமூன்றொருசிலைகுழையத்திருப்பதமண்டலித்திரு
காற்; பொருந்துறக்கதித்தபுன்னகையழலிற்பொடிந்தனவெனிலெ

ணிற்புகுந்த, விருண்மலமாயைகரணமாதியவுமெரித்தெனைப்புரத்த லுமரிதோ, நரைதருவிடையின்வருதிருநாகைஞானநாயகதனிப் பொருளே. (21)

தனிப்பெருங்கடலுளகல்கிளைபரப்பித்தாவருங்கவடுபெல்போக் கித், துனைப்பொடுங்ககனமளவுகொக்குருவைத்துளைத்ததினிவர்ந் தருந்தமிழ்நூன், முனிக்கருள்குகனையளித்ததென்னாகைமுதுபதி முக்கண்வானவனைக், கனிவொடும்புகழக்கடவர்தாடலையிற்கலனெ னப்புனைதனங்கடனே. (22)

கடக்கரும்பிறவிக்கடலொழித்தினியெக்கருக்கடைவிரவிடாத டுத்த, தொடக்கொருங்கற்றியெனையெனக்களித்ததூயனேபனிவ ரையுதித்த, தடக்கருங்கயற்கட்சிறுநகைத்துவர்வாய்த்தண்மதிமுக மலைமுலையா, ளிடத்துவெள்விடையினடுத்துவந்தருள்செய்தின்ன முதருத்துநாகையனே. (23)

கையெனக்களித்துங்குவித்திலேன்சிரத்திற்கருதிலேனைந்தெ ழுத்துருவா, மெய்யினைப்பவளமேனியையுமையாண்மேவுமாநந்த மால்வரையை, வையகமதிலென்பிழையலாதெவன்கொன்மறலி நாட்குறுகிடினுறையே, தையனேபொன்னித்துறைபொருநாகை யத்தனேயறிகிலனினியே. (24)

இனியறிகிலனென்றெந்தைநும்பதுமத்திணையடிப்புணையலா தவலக், கனைகடற்பிறவிக்கரையொழிந்தகன்றுகாண்டருந்துறக்க மேவுதற்கே.பனிமலைக்குமரிகிரிமுலைக்கவுரிபணித்தநற்றவத்தினுக் கிரங்கும், நனையலர்மவுலிக்கரவணிநாகைநாதமெய்ப்பொருளரு வுருவே. (25)

அருவமுமுருவமாகி யெவ்விடத்துமண்மையுஞ் சேய்மையுமி டையு, மருவுமென்மனத்துமுறையரும்பொருளேமாசிலாநந்தவெ

ள்வெளியைத், திருவளரகலச்செம்மலுங்கமலத்தேவுமங்கறியகி
லொளியைக், கருவிலியதனைநாகையம்பதியிற்கண்டனன்கண்களி
ப்புறவே. (26)

கண்களித்திடு மெல்லையினுளங்குழைந்த கரங்குவிந்தனவெ
னைமறந்தே, பண்பயின்றனநாப்பரவசநிலையிற்பகரரிதிவ்வகைத்
தெனவே, மண்படுமுலகின்வலியவந்தாண்டென்மலரடிசிந்தைவிட்ட
கலா, நண்பெனக்களித்தநாகைவாழிறையேநலமிலேனிழைத்தவெ
ன்புகலாய். (27)

புகலருஞ்சிறப்பினமரர்நாடாளப் பொருந்துவரிருந்தனங்குவி
ப்ப, மகிதலம்புரந்து பெறற்கரும்போக வாழ்வெலாம் வகைவகை
நுகர்வர், பகிர்மதிச்சடையெம்பரம்பரனாகைப்பண்ணவன்றிருவடிப
ரவுந்தகையையர்பிறராங்கெய்துவபெருவாதனைபுரியமபுரப்பரிசே.

புரப்பரி தெவ்வன்கொனின் னருள்விழைந்தேன்புந்தியங்கமல
மென்மலரைப், பரப்பிடுபரிதியனையதென்னாகைப்பாணிறவண்ண
நின்பதிக்கே, வரப்பெறுமதிவெங்கதிரரியயன்மால்வல்லரவரசெ
லாம்வேண்டும், வரப்பிலெவ்வரமுமவரவர்க்களித்தவள்ளனீயாதலி
னெனையே. (29)

எனையறிந்தழியாப்பெரும்பவக் கடல்விட்டேறநான்பெற்றது
ன்பதுமத், தனிமலரடியிற்பிரிதொருபொருளைச்சாற்றவுமறிகிலனு
லகிற், குனிதருபிறைவாணுதலுமைமகிழக்குலவுவெள்விடையெழு
நாகைக், கினியநற்பொருளே.பழமறைக்கொழுந்தேயென்றெனக்
கருளுவதிறையே. (30)

## கலி விருத்தம்.

இறைவனாகியெனைத்தடுத்தாண்டிரு
ணிறையுமும்மலநீக்கிக்கரிசறு

துறையில்ஞானந்துலக்கிடுசோதியா
னறைமலர்த்தடநாகையிலேகனே. (31)

ஏகநாதனிரண்டறவென்னுளே
சோகமின்றித்தொடர்ந்தவன் றென்மறை
நாகைவாழுநரை விடையொன்றுடைப்
போகமார்த்தவன் பூங்கழல்போற்றவே. (32)

போற்றுநாகர்புரவலன்பூசனை
யாற்றுநாகலிங்கேசனருண்மலிந்
தேற்றுமெல்லையிரும்பவவல்வினைத்
தோற்றமற்றனவற்றன துன்பமே. (33)

துன்பவேரறுத்தோன்கழல்சூடினே
னென்புபெண்ணுருவெய்துமியலுளா
னன்புறுந்திருக்கூட்டமணுகினே
னின்பநாகையிலீசனையேத்தியே. (34)

ஈசனேயெனக்கின்னல்தருமபவ
நாசனேதிருநாகையிற்சண்பக
வாசனேகுன்றுமாமுலைவல்லியாள்
நேசனேகதிநின்னருட்செல்வமே. (35)

செல்விசேர்திருநாகையிற்செங்கதிர்
மல்குதண்புனலாடியெம்வள்ளரு
ளொல்குமென்மனத்துன்னுநல்லார்தமக்
கில்லையில்லையினிப்பிறப்பில்லையே. (36)

பிறப்பிலான்பிறைசூடியபிஞ்ஞகன்
மறைப்பினின்றெனையாண்டமலைமகள்

சிறப்பிருகந்திகழ்திருநாகையான்
வறப்பில்வல்வினைமாய்த்தவென்மாயமே. (37)

மாயவாழ்க்கையின்மன்னிடுமென்மயல்
காயநின்றகதிரொளிச்சோதியா
ஞயன்வேதனறியவரியதோர்
தூயஞானையிற்றோன்றியதோன்றலே. (38)

தோன்றுமும்மதிற்சுட்டெரிசெய்தவ
ஞன்றவார்சடைநாகையுஞயக
னீன்றதாயினெனக்குறுகாதலா
ஞன்றபாதமமைந்தவென்சென்னியே. (39)

சென்னிதாழ்வுறச்சீரடிபோற்றிலா
வென்னையாளவிசைந்தவென்பான்மையே
பொன்னிசூழ்தருசண்பகப்பொங்கர்வாய்
மன்னுநாகைவளம்பதிவள்ளலே. (40)

## கோச்சகக் கலிப்பா.

வள்ளமிசைச்சிவஞானம்வடித்ததனப்பாலுண்ட
பிள்ளைசொலுந்தமிழ்திளைத்தபெரும்பதிதென்ஞகைவளர்
கள்ளமிலர்த்தேவேநின்கழல்பரவுமெய்த்தொண்ட
ரெள்ளாதபேரருளிங்கெய்தவருளெம்மானே. (41)

எம்மானின்னருளிருக்கவேதிலரைப்போலவலைப்
பொய்ம்மாயக்கடலிழிந்துபுணையின்றிப்புலன்வழியிற்
செம்மாந்ததீயநெறிச்சிந்தைகெடுத்தாதரிப்பாய்
கைம்மாவினுரிபோர்த்தநாகைவளர்கற்பகமே. (42)

கற்பகத்தின்மிக்கபுகழ்க்காமருசண்பகத்தமர்ந்த
விற்பனனேநாகைவருவேதியனேமெஞ்ஞான
வற்புதனேயென்றென்றுனருண்மொழிப்பண்முறைபாடிப்
பொற்பதுமம்போற்றிடுவான்புரந்தருளும்புண்ணியனே. (43)

புரந்தரனூரகலிகைபாற்பிழைத்தபிழைபொருத்தருள
விரந்ததுகண்டவற்கிரங்குமெந்தாய்நின்பெருங்கருணைத்
தரந்தெரியாவெனக்கருளுந்தகைமையதோநாகைவரு
நிரந்தரனேசீதரனூர்நிதம்பரவுநின்மலனே. (44)

நின்மலனையுலகேழுநிறைந்தபரிபூரணனைக்
கன்மமறுஞ்சிவஞானக்கலைபயிற்றக்கல்லாலிற்
சின்மயமாயெழுந்தருளுந்தேவர்தொழுந்தேவேயென்
புன்மைதவிர்த்தருளுதியோபுனனைகைச்சங்கரனே. (45)

சங்கமருவுந்தமிழிற்றலைமைபெறுநாயகனே
பைங்கணரவரசேத்தும்பதிநாகையாதிபனே
மங்கையொருபங்குறையும்வானவனேநாயடியேன்
கங்குல்பகனேடுவநின்காமருசேவடித்திருவே. (46)

திருவேட்டும்புகழ்வேட்டுஞ்செவ்விதழார்நலம்வேட்டும
பொருள்வேட்டு முழன்றதலாற்புண்ணிய நின்னருள்வேட்டேன
கருவேட்டக்கருதியவோவிழைத்தவேலாங்கண்மனத்தே
னிருளோட்டக்கடைக்கணித்தாளெழினைகையிடத்தரனே. (47)

அரண்மலியுஞ்சினகரஞ்சேரணிநாகையாதிபனுஞ்
சரணடைந்ததேவர்பிரான்சதுர்முகன்மால்பெறும்பேற்றைத்
திரணமளவெண்ணுதேசிந்தைவலித்தகமகிழ்ந்த
முரணுடையேன்முறையிடுவதெத்தேவைமுன்னிட்டே. (48)

முன்னிட்டதேவரெலாமுடிவணங்கித்தொழுதேத்தும்
பொன்னிட்டகொடிநுடங்குபுதுமாடத்திருக்கோயின்
மன்னிட்டவொருநாகைவானவனேவந்திறைஞ்சு
மென்னிட்டமேயறியாதியாரறிவாரிருநிலத்தே. (49)

இருநிலநீரெரிவளிவானியமானனிருசுடரும்
பெரும்புவனப்பல்லுயிரும்பிரிதாயுமிருந்தரசு
தருந்திருநாகையினெழுந்தசங்கரனேதமியேனைக்
கருவணையாதாண்டதற்கிங்கறியேனெக்கைம்மாறே. (50)

## எழுசீர்க்கழி னெடிலடி யாசிரிய விருத்தம்.

கைம்மாறிலாது வலிதென்னையாண்ட கறைசேர்களத்தகுழை
தோய், மைம்மான்விழிப்பெண்ணொருபாகம்வைத்தமதிகொன்றைது
ன்றுமவுலிப், பெம்மானெனக்குனுறவேதகைத்தபிறகாமியத்தினி
லையா, விம்மானிலத்தர்தவநீடுநாகையினிதுற்றமுத்திமுதலே (51)

முதலாயவாறுசமயங்கடோறுமொழிகின்றதேவமுறையிற்
பதநின்றபத்தர்மனநின்றநந்தபதநல்குநாகைநகரிற்
சதமென்றுநம்புமெளியேனுவப்பதருசண்பகத்தினிழலிற்
சதகோடியாதவரின்மிக்கெழுந்ததனிமாமுதற்கடவுளே. (52)

கடனின்றெழுந்தபெருநஞ்சமுண்டகருணேசகவலைவலையிற்
படநின்றநந்தவிடர்கொண்டலைத்தபழியேதவிர்த்தெனகலா
மடனின்றறுத்துனடிபேணவைத்தவகைகொண்டுரைக்கவசமென்
றிடமன்றுநாகைநகர்மன்றுளாடுதிருவேதவத்தினுருவே. (53)

தவமொன்றிலேன்செய்பவமேயுருக்கொள்சடமிங்கெடுத்துமு
கிழ்வுற், றவமேதிரிந்ததமியேனிடத்துனருளெய்துமாறுமறியேன்

புவனுதியண்டமுழுதாகிநின்றபுநிதாபுயற்கணளவித்.தவழ்சண்பகத்
தினிழன்மேவுநாகைதனில்வாழ்வளிக்குமறிவே. (54)

அறியாதயாவு மறிவித்தநீயெனறிவூடிருந்தருமறை
நெறிமாறிடாதிவ்வலப்பிறப்பினிலெ கெட்டழிக்கவலையோ [ருந்
பொறிவாளராவெண்மதிகங்கைகொன்றைபுரிதாழ் சடைக்கண்மிளி
துறையோடுபொன்னிநதியாடுமோகர்தொழுநாகையாதிமுதலே (55)

ஆதித்தன்வேதனயிராவணத்தனலர்மங்கைகொண்கன்முதலாப்
பேதித்ததேவர் பலரானெருங்குபெருபூச லிடைதவிர்க்கு
மாதிக்கமுற்றவதிகாரநந்தியமர்தெய்வநாகைநகரார்
சோதிக்கண்மூன்றினெதிர்நின்றிடாது துயர்சேரிருட்படலமே (56)

இருளன்றுமாயவெளியன்றிரண்டினிடையன்றுரைக்கவெளிதன்
றருளொன்றுநாகைநகர்நின்றதேவனழல்கொண்டமே[illegible]யெனிலிம்
மருளொன்றுமாய வுலகத்தின்மாந்தர் வகைகொண்டுகாண வெளி
தெருளுற்றகுன்றுமுலைவல்லிபங்கர் திருவாரடிக்கமலமே. [தோ

அடியாரிறைஞ்சுதிருநாகைமன்றமரவிந்தமாணுமதனுட்
பொடியாடுமேனிதிருநாகலிங்கர்பொழிகின்றதேறலதன்வாய்ப்[யப்
பெடையோடயின்ற சிறைவண்டினங்கள்பிறழ்கின்ற தொக்குமிம
பிடியன்னகன்னி குழைசென்றளாவுபெருவாளயிற்கண்களே. (58)

கண்ணுதியைந்துபொறிசெல்லுமாறுகருதித்தொடர்ந்தபுலனே
டெண்ணுதிழைத்தபிழையெண்ணிறந்தவெனினும்புரத்தனினதே
விண்ணுடைளாவுமதில் சூழுநாகைவிமலாகடைந்தகடல்வா
யுண்ணு நஞ்ச மமுதாகவுண்டவொருமாதவத்தினுருவே. (59)

உருவாகியுருவினுயிராகியுயிரினுணர்வாகி நின்றறியொணு
வருவாகியகிலநிறைவாகிமன்று ளாநந்தநடன ஞானப்

பொருளாகிநின்றதிருநாகையேகபுனிதாகுனித்தகடையின்
னருளாவதன்றியயர்கின்றபோது மறியேன்விரும்பல்பிறவே. (60)

## வேறு கலிவிருத்தம்.

பிறவா வரமெற் கருளும் பெருமா
னுறவா யொருமங் கையிடத் துறைவான்
றிறவா விருளின் றிமிரங் கெடவே
யறவா ருயர்நா கையி னார்ந்தனனே. (61)

தனநே ரியநா கையிரு தவமா
புனலா டியவற் புதமெய் யடியா
ரினனா யிடைவைத் தெணவும் படுமோ
கனகா சலசா பகருங் களனே. (62)

களபந்தருகுன் றுமுலைக் கனிவா
யிளமென் மொழியா ளிடமே வியமங்
களநா கையின்வாழ் கருணை சபிரா
னுளமா சறுமா றுபுரிந் தனனே. (63)

புரிதாழ் சடையெம் புனனா கையர்கோ
னெரிவாய் நரகுக் கிரைதந் திடுமெப்
பெரிதாம் வினையிற் பிறழா துதடுத்
தருளா னெனையாண் டிடுமா றெவனோ. (64)

எவனோ பணியா திருமாந் தவலப்
பவனோய் தருபௌ வமதிற் படிகின்
றவனா யினனீ தறியே னறிவே
புவனா திதொழப் பொலிநா கையனே (65)

நாகைக் கொருவித் தகஞா னவருட்
போகந் தருபுண் ணியபொற் கழலென்
சோகந் திகழ்புந் திதுலக்கிடுநா
ளேகந் தருவீ டெதிருற் றிடுமே. (66)

எதிருற் றிடுகா லபடற் கெவனே
மதிகெட் டுழல்வே மருளுற் றதுதன்
கதிருற் றிடுவே ணியநா கையரும்
பதிபெற் றிடினே பணிவா ரவரே. (67)

பணிரா சசிலம் பணிபங் கயகிண்
கிணியா டநடங் கிளர்நா கைசிகா
மணியே மணிகண் டமதித் துணதாட்
பணிவா ரொடுமே வுமருட் பணியே. (68)

அருளா லலதென் னறிவா லருநூற்
பொருளா லறியப் படுமோ பொறிவா
ழிருதாண் மலரின் பநலத் திருவைந்
தருமே வியநா கைதயா பரனே. (69)

பரபோ தமெனக் கருள்பங் கயசங்
கரஞா கையினே கடிமா மலரிட்
டிரவா ரொடுசென் றுபணிந் திடுவோ
ரிரவார் பிறதே வரையின் புறவே. (70)

## ஷை வேறு

இன்புறுதமிழ்ப்பாமாலையிடத்து றும்விருப் போகின்பா
லன்புறுநாவலூரர்க்கருளியவருட்பேறாலோ
முன்பொருமறைச்சிறானைமுதலை யுண்டளித்தபான்மை
பொன்பொருபுரிசைசூழப்பொலிதருநாகைவாழ்வே. (71)

வாழ்வெணக்களித்தநாகைவள்ளலேவழுத்தற்கில்லாப்
பாழ்மனந்திரித்தஞ்ஞானப்பகுப்பொருங்ககற்றிநல்லார்
கேழ்தருமவையிற்கூடக் கிட்டுமோகிளந்ததீஞ்சொற்
றாழ்குழையொருத்திநாளுந்தழுவுசெம்பவளக்குன்றே. (72)

பவளமால்வரையின்மேனிப்பச்செனப்பகிர்ந்தோர்பாதி
தவளமென்முறுவல்பூத்ததையலர்க்களித்தநாகைப்
புவனநாயகபிழைத்தபிழைபுகலெளிதன்றேனுந்
தவமிலேற் புரத்தனு ந்தன்றண்ணளிக்கியலதாமே. (73)

தாமவர்நிலைகண்டுய்யுந்தத்துவ ஞானம் பூத்த
தோமில்சீரறிஞர்காணாத்தொன்மறைக்கொழுந் தேநாகைச்
சேமமார்நிதியின்மிக்கதிருவருட்டிருவேயுன்ற
னாமமாயிரமுமேத்துநலமருளெனக்கெந்தாயே. (74)

தாயினுங்கருணைகூர்ந்ததையலோர்பாகம்வைத்த
நீயலாதெவரேதீர்க்கு நீர்மையரிழிந்தயாக்கை
நோயினைப்பிறவிமுந்நீர்நிலையினைக்கரிசுதீரப்
பாயுமால்விடையின்மேவுநாகையம்பதிநண்போனே. (75)

நண்பகலெழுந்தவேதநல் லடியவரைக்காணி
னுண்பதற்கெவனேகொல் லென்றுன்றிநெஞ்சயர்வே னன்னோர்
நண்பெனக்கமைவதென்றோநாயினேனுய்யவேண்டிச்
சண்பகமருவுநாகைத்தலத்தினிலெழுந்ததேவே. (76)

எழுதருமறைதந்தாண்டவென்பணிநாகைநாத
னெழுபிறப் பிறப்புங்காய்ந்தவியலறிந்திறைஞ்சிடாதே
புழுகொடுநறு மென்மாலை புனைந்தவந்திரிந்ததீ யேன்
விழுமியபதந்தந்தாளுமெய்ந்நிலையறிவதென்றே. (77)

என்றுநின்கருணையென்பாலெய்துவ தேழைநெஞ்சம்
பொன்றுமிப்பிறவிதோறும்புக்கலைந் தநாதிதொட்டுச்
சென்று சென்றூசலொக்கத்திரிதரலறியாய்போலுங்
குன்றுநேர்முலையாளாகங்குலவியநாகைக்கோவே. (78)

கோவெனவுலகங்காத்துங்குரையிரந்தகமுள்ளாரைத்
தாவெனவுடலை யோம்பித்தரையிடையுழலாநின்ற
பாவனைநின்னதல்லாற்பன்னுதற்கெவரேகாணேன்
காவனம் பொலியுநாகைக்கண்ணுதற்கடவுளாரே. (79)

கடலுடைப்புவியினென்னைக்கனிவுகொள்கருணையாலே
படர்தருமுமலவாதைபரிதி முன்பனியிற்சீய்த்த
மடலவிழ்கடுக்கைவேணிவள்ளலேகைம்மாறேதென்
றிடவலனினக்கேநாகையெழினகருடையெம்மானே. (80)

## கலிநிலைத்துறை.

மானினேர்விழிமங்கையர்தங்களின் விழைந்தே
யீனமாம்பலகொடுவினையிழைத்துநாட்கழித்தேன்
றேனலம்புநின்பங்கயச்சேவடிக்கென்றோ
நானடைந்தருள் பெறுவது நாகையுத்தமனே. (81)

தமனியச்சிலை முலையினுள்பயிலருந்தவத்துக்
கமையநின்றநாகேச்சரமெழுந்த வாரமுதென்
கமலநெஞ்சகக் கோயிலிற்கண்டுகண்களிப்பத்
தமது பேரருளென்றுறுமோவினைதவிர்த்தே. (82

தவறிலாப்பெருங்கருணையிற்சஞ்சிதமறுக்குங்
கவறிலானடிக்கன்பிலன்கதிதருநாகைப்
பவனதாலயஞ்சூழ்கிலன்பரிதியம்புனலிற்
றுவறவாடிலனியாண்டுகொல்துறப்பதிப்பிறப்பே. (83)

பிறக்கவஞ்சிலனஞ்சிலனிறந்திடும்பிணிக்கே
சிறக்குநின்னருட்பெருக்கொடுசிந்தனையுனதாட்
புறக்கணின்றிய செல்வமுமெய்துமேற் புரங்கள்
பறக்கவெங்கனல்வீசியநாகையிற்பரமே. (84)

வீசுதண்கதிர்வேணியநின்கழல்விரும்பிப்
பாசமும்மலவல்லிருள்பறித்திடவறியா
வூசனேர்மனத்தெனைநனிபுரந்திடலுரித்தாம்
பேசுதண்டமிழ் நாகைவாழ்பெருந்தகைநினக்கே. (85)

நினைக்குரைத்திடுமாற்றமொன்றுளதுநெஞ்சகமே
சினக்களிற்றினையன்றுரிதெய்வநாகையர்கோன்
தனித்திருப்பதமன்பினுற்றலைகொடுபணிகென்
றினித்தபொன்னகர்வாழ்வெலா மிம்மையிற்பெறவே. (86)

இம்மையின்பமிங்கருளியவிறைவனையிமயக்
கொம்மைவெம்முலைக்குயிலொடுங்குலவிடக்கண்டேன்
மும்மைவெம்பவங்காண்கிலன்மும்மலமுங்காணேன்
செம்மைசேர்திருநாகையிற்சினகரம்புகுந்தே. (87)

புகுந்தயாக்கைகளளப்பிலவென்றெனைப்புரப்பான்
மிகுந்தகாதலினபயமும்வரதமும்விளங்கப்
பகிர்ந்தநுண்ணிடையாளொடும்பாயமால்விடையி
னுகந்தெழுந்தனனகைவாழொருதனிமுதலே. (88)

தனித்தமந்திரந்தீக்கையாலன்றியென்றனையைக்
குனித்தவின்னருளுக்கினுற்குமைத்திடுகுளிர்பூம்
புனத்ததெய்வதநாகையின்மேவுநம்புநிதர்க்
கெனைத்ததோபுகழ்ந்தேத்திடு மெனதுபுன்றமிழே. (89)

புன்மை வெங்கலிபாற்படாதாண்டருள்புரிந்த
தன்மையானறிதரத்ததோதக்கைம்மாறிம்
மும்மைநல்லுலகத்துமுண்டோமுனிவரரோ
டம்மைகாணநின்ருடியநாகைவாழரசே. 90

## எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அரசநாகமிங் காற்றுபூசனைக் ககமகிழ்ந்தநாகேசநின்னரும்
பிரசவார்கழற் கிடையருதுளம் பேணறந்தவா போற்றிவெந்தழற்
பரசுதங்கு செங்கரதலத்தபால்வண்ணமேனியிற்பனிமலைப்பெருங்
குரிசின்மாமகட்பசியவண்ணமுங்குலவநின்றமாகுழகபோற்றியே.

போற்றுதண்டமிழ்ப் பனுவல் கொண்டுனைப் புகலவல்லரோ
டொப்பிலுயினேன், சாற்றுபாடல்கேட்டருவருத்திலாத்தகைமை
போற்றிதென்குடந்தையுத்தமா, கீற்றுவாமதிக்கலையைவாளராக்கிட்
டிவிண்ணுலாங்கங்கைமென்றிரை, யாற்றின்மேவுமோர்தோணி
யென்றுவிட்டகலுவார்சடைக்கடவுள்போற்றியே. (92)

கடமதத்தவா ரணமுரித்திடுங்கயிலைநாயகாபோற்றிமாமணிப்
படபணத்தகங்கணசினத் தெழும்பாயமால்விடைப்பரமபோற்றிநற்
குடமிகந்தபொற்குன்றுமாமுலைக்குமரிபாகனே போற்றிசண்பகத்
தடவனத்து மாதவனயன்றொழத் தங்குநாகலிங்கேசபோற்றியே.

தங்குமென் மனத்துயரொழிந்திடச் சமயமியாவினுந்தாணுநா
னெனுப், பொங்குநஞ்சமுண்டமரர்காத்திடும்புதுமைகாட்டியாண்
டருளல்போற்றிவான், துங்கவெண்பிறையணியநுதற்பெறுங்கோ
கையோடுதென்குடந்தைமேவிவா, ழெங்கணுயகா போற்றிமாமறைக்
கிறைவனேசரண்போற்றி யென்றுமே. (94)

சரணபங்கயம் படியின்மீதுறச சாற்றுநாவலூர்ப் புலவனேவ
லாற், பரவைகாதலாம்புலவிதீர்த்திடும்பரிவுபோற்றியோர்பாலன்
வேண்டலிற், கரணமாய்வுறக்காலன்மார்பிறுங்காலகாலனே போ
ற்றி யொன்னலா, ரரணமூன்றுமன்றழலெரிக்குகாளளியபுன்ன
கைப்பெரும்போற்றியே. (95)

பெருகுமண்டமீரேழதன்வயிற் பேசுபல்லுயிர்த் தோற்றமாய்
நிறைந், தருவமேயலாதுருவமே யெனாவரியகிற்கிலாவமல போற்
றிநந், திருமடந்தைவாழுரிய நாகையிற்றேவபோற்றியென்கொடி
யதீவினைக், கருமமாக்கடற்சுவறு சோதியங்கதிரின்மிக்கநின்
கருணை போற்றியே. (96)

கருணையா லெனக்கிம்மையம்மையுங் காட்டவல்லநற்குரவ
போற்றிவல், லிருணயந்திடாவெளியிலாடல்கூரிறைவநும்பதத்தி
ணைகள் போற்றியும், பருணயந்தமாலயன்வலாரியோர் பரவுகண்
ணுதால்போற்றிமின்னனே, ரருணவார்சடைக்கணியுமாமதிக்னை
யநீறுதோயண்ணல் போற்றியே. (97)

அண்ணலாகி முத்தொழிலியற்றினா யரியவம்பலத்தைந்துமா
டினா, யெண்ணருந்தவத்தெந்தை யாயினாயிருவினைக்குமோர்குரவ
னாயினாய், நண்ணுமென்மனத் தவசின்மேயதோர் நளினமாமலர்த்
தேனுமாயினாய், பண்ணின் மாமறைபரவு நாகைவாழ்பரமதேசி
கா போற்றி போற்றியே. (98)

பரமதேசிகாபோற்றிமான்மழுப் படையுடைத்தவா போற்றி யாடல்சே, ரரவணிந்ததோளபயமென்கரத்தாதி போற்றியென்ன ம்மைமங்கலம், விரவுமாமணக்கோலம் வேட்டதோர்வெள்ளிவெற் புடைக்கடவுள்போற்றியா, தரவிலேனை யாண்டாதிசண்பகத்தருவ மர்ந்திடுஞ்சம்பு போற்றியே. (99)

போற்றியெம்மையாளண்ணனும்பதப் போதின்மேய சீராதி பேரருட், போற்றிவெம்புலித்தோலராவொடும்பொலிமருங்கினே ய்போற்றிமாமறை, போற்றிகுன்றுமாமுலையெனம்மைதோய்பொ ற்புயங்களெட்டுற்றகாட்சியே, போற்றியண்டமீரேழ்பணிந்திடும் புநிதமாமணி போற்றி போற்றியே. (100)

முற்றிற்று.

குன்றுமுலையம்மன் துணை.

---

சென்னை-600 003.

9A
B-101